R 5874 [Page 94]

# காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள்

## Lessons of the Lilies

திறவு வசனம் : மத்தேயு 6:28 – " காட்டுப் புஷ்பங்களை கவனித்துப்பாருங்கள் "

நமது மனித குடும்பத்திற்கு பயமும், இனிவரும் நிலைகுறித்த கவலையும் மிகவும் பயங்கரமான எதிரிகள். அவர்கள் தங்கள் சிந்தையில் அழிவின் காரியங்களை அணிந்துகொள்கிறார்கள். இவைகள் நரம்புத் தளர்ச்சியை உண்டுபண்ணி, களைப்பை வருவிப்பதோடு, உடலுக்கு மிகவும் அபாயத்தை உண்டுபண்ணும். சுவிசேஷ சபையாருக்கு தேவன் ஏற்படுத்தியுள்ள தெய்வீகப் பாதையில் நடக்க தேடுபவர்களிடத்தில், பயமும் வருங் காரியங்களைப் பற்றின கவலையும் விசேஷித்த தடைகளாயிருக்கும். நம் இரட்சகர்தம்சீஷர்களிடத்தில் பேசினபோது, இவ்வுண்மையை மனதில்வைத்திருந்தார். தம்மைப் பின்பற்றும் பின்னடியார்கள் எவ்விதக் கவலையுமின்றி, தங்கள் இருதயத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆனால் அதேசமயத்தில் அவர்கள் அலட்சியமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. முறையான ஜாக்கிரதை உணர்வை நாம் காண்பிப்பது அவசியமானதே, ஆனால் அதன் உச்சநிலையான கவலைப்படுமளவு அல்ல. தற்கால நிலைமையில் ஆசீர்வாதத்தை அனுபவிக்க, நாளைய தினத்தைப்பற்றிய சிந்தனைகளும் பயங்களும் தடையாய் இருந்து, செயலற்ற தன்மையை உண்டாக்குகிறது. அப்போஸ்தலர், " நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல்.." என்கிறார்.

இங்கு, பொறுப்புணர்வு மற்றும் முறையான அக்கறை செலுத்துதலைக் குறித்து அவர் கூறாமல், கவலைப்படுதலானது ஆத்துமாவின் இளைப்பாறுதலையும், சமாதானத்தையும் கொள்ளையாடிவிடும் என்ற தன்மையிலேயே குறிப்பிடுகிறார். மேலும் கர்த்தரிடத்திலும், அவரது பராமரிப்பிலும் விசுவாசக்குறைவு உள்ளதென்பதற்கு இது அறிகுறியாக இருக்கும். மேற்கண்ட வசனத்தில், கவலைப்படாமல் என்ற சொல்லின் கிரேக்க மூலப்பதம், அதிகப்படியான கவலை(over - anxious) என பொருள் தருகிறது.

## R5875 : page 94

தேவனிடத்தில் நம்பிக்கையாயிருத்தலைப்பற்றி தன் சீஷர்களுக்கு, காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளர்கிறதென்று உதாரணத்தோடு விளக்கி, அவர்களை ஊக்கப்படுத்தும்படி ஒரு பாடத்தைக் கூறினார். பாலஸ்தீனாவில் லில்லி புஷ்பங்கள் எங்கும் சாதாரணமாக பார்க்கமுடியும். இது ஓரளவு சிறிய பூவாகவும், இதன் நிறம் பெரும்பாலும் சிவப்பு நிறமாகவும் இருக்கும். அவை தடைகளைத்தாண்டி ஜீவித்து வளரக்கூடியவை. இதன் வளர்ச்சிக்கென எந்த விசேஷ பராமரிப்பும் செய்யப்படுவதில்லை. இருந்தபோதிலும் இவை எதையும் சார்ந்திராமல் வளர்கின்றன. இவைகள் வழியோரங்களில் இருப்பதால், பாதையை கடந்து செல்பவர்களால் மிதிக்கப்படுகிறது. ஆனாலும் இவை வளர்ச்சியடைந்து, முதிர்ந்து, மலர்களை தருவதோடு, மிக நேர்த்தியான உயிரினமாக, நுண்ணோக்கியில் ஆராயும்போது மிக அழகானதாய் காட்சியளிக்கிறது. சாலமோன் தன் எல்லா மகிமையிலும் இவைகளில் ஒன்றிற்கு பகட்டாக உடுத்தப்பட்டதுபோல் உடுத்தினதில்லை. புஷ்பம் உடுத்தப்பட்ட விதம் பூரணமாய் இருந்தபடியால், அற்புதமாயிருந்தது. நித்தியவாசியானவரின் கைகளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த புஷ்பத்தின் நேர்த்தியான கட்டமைப்பை, உன்னதமாய் உடுத்தப்பட்ட விதத்தை தோராயமாக மதிப்பிடமுடியாது.

இதிலிருந்து கற்கும் பாடம் என்னவெனில், புஷ்பங்கள் தயவற்ற சூழ்நிலையில் வளர்ந்தபோதிலும் தங்களையே பராமரித்துக் கொள்ள முடியாதபோதிலும், தங்களைப்பற்றி எந்தவிதத்திலும் கவலைப்பட முடியாதபோதிலும், அவைகள் செழித்துவளரவும், மிக அழகாகத் தோற்றமளிக்கவும், தேவன் அவைகளைப் பராமரிக்க ஏற்பாடுசெய்துள்ளார். இந்த புஷ்பங்கள் தாங்கள் பெரிய மரங்களாக வளரவேண்டும் என்றோ, வார்த்தையிலோ அல்லது வானளாவ உயரத்தில் இருக்கவேண்டுமென்றோ விரும்புவதில்லை. அல்லது, அவைகள் திராட்சைக்கொடிபோல் படிப்படியாக, உயரமாக வளரவேண்டும் என்றும் விரும்புவதுமில்லை. இதற்கு மாறாக, தங்களது நித்திய சிருஷ்டிகர் தங்களை தெரிந்துகொண்ட நிலைமையில் நிலைத்திருப்பதில் திருப்தியடைகின்றன – மத் 6:30.

### நம்பிக்கையின் முக்கியத்துவமே வலியுறுத்தப்படுகிறது :

தேவனுடைய பிள்ளைகள் புஷ்பங்களிலிருந்து பாடம் கற்கவேண்டும். அவர்களும் கர்த்தருடைய ஏற்பாடுகளின்மேல் திருப்தியடையவேண்டும். கவிஞர் வர்ணிப்பதுபோல் –

என் தேவன் என்னை நடத்துவதால் நான் காண்கிற வாய்ப்புகளில் மனநிறைவடைவேன்!

இந்த நிலைமையை நாம் ஏறத்தாழ அடையும் போது, அதேஅளவு சமாதானம் மற்றும் இளைப்பாறுதலை நமக்குத்தரும். நாம் கவலைப்படவோ, அசதியாகவோ இருக்கக்கூடாது. மாறாக விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

" ஆவியில் அனலாயிருந்து கர்த்தருக்கு ஊழியம்செய்யுங்கள் "

செய்யும்படி நம் கைக்கு எட்டினதுஎதுவோ அதை முழு பலத்துடன் செய்வோமாக. இவ்வாறு செய்யும்போது, அவர் நம் நன்மைக்கேதுவாகவே அனைத்தையும் செய்கிறார் என்ற நம்பிக்கையோடும், நிறைவடைந்த மனதையுடையவர் களாயும் இருக்கவேண்டும். அவர்பேரில் நம்பிக்கை வைக்க

கற்கவேண்டும் என்ற இந்த முக்கியமான பாடத்தை நாம் நினைவில்நிறுத்தவேண்டுமென அவர் விரும்புகிறார்.

இந்தப் பாடத்தைக் கற்பதில் அலட்சியங் காட்டுபவர்கள், மேசியாவின் ராஜ்யத்தின்கீழ், தேவன் தம் சிந்தையில் நமது எதிர்காலத்திற்காக வைத்திருக்கிற மாபெரும் பணியை நிறைவேற்ற ஆயத்தப்படாதவர்களாவோம். முழு நம்பிக்கை வைக்காத எவரையும் தேவன் அந்த ராஜ்யத்தில் அனுமதிப்பதில்லை என்று நாம் நிச்சயித்திருக்கிறோம். தேவனது பராமரிப்பின்கீழ் புஷ்பங்கள் எவ்வாறு செழிப்படைகிறதோ அவ்வாறே அவரது ஜனங்கள் அனைவரும் அறிவிலும், ஆவிக்குரிய அழகிலும் வளர்ந்து, குணாதிசய அழகில் செழிப்படைவார்கள். அவர்கள் சில பெரிய காரியங்களை செய்வதன்மூலம் இதனை அடைந்துவிட முடியாது. மாறாக நம் வாழ்க்கையில் ஆவியின் அனுக்கிரகத்தில் சிறு காரியங்களை அணுகுவதன்மூலம் அன்றாட அனுபவங்களை அடையலாம். தேவனுடைய பிள்ளைகள் அத்துமீறாமல், ஸ்திரமாக வளர்ச்சியடைய வேண்டும்.

காட்டு புஷ்பங்கள் எப்பொழுதும் தாழ்வான இடங்களையே பெற்றிருக்கும். ஒருபோதும் ஒரு பெரிய மரமாக இருக்க எண்ணாது. அவ்வாறே நாமும் மாம்சத்தில் இருக்கவேண்டும். கர்த்தர் அவருக்கேற்றபடி நம் ஒவ்வொருவரையும் வடிவமைத்த இடத்தில் நியமிக்கிறார். தற்போது தாழ்மையான நிலைமையில் வைத்திருப்பதன் மூலம், எங்கே நாம் வளர்வது? பிதாவின் சித்தப்படி எங்கே நம் நேர்மையும் உண்மையும் பரீட்சிக்கப்படும்? எங்கே நம் குணாதிசயத்தின் மொத்த அழகும் முழுமையாக வளர்ச்சியடையும்? – என்று வருங்காலத்திற்கென சிறந்த பாடங்களை நம்மால் கற்கமுடியும்.

-------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com